REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★
மூன்று மாதம் ... ... ரூ. 6
ஆறு மாதம் ... ... ரூ. 12
ஒரு வருடம் ... ... ரூ. 24
தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 21உ வெள்ளி (3—5—57) ★ ★ வெளியூர்: சித்திரை 22உ சனி (4—5—57) இதழ் [278

இலங்கைத் தமிழர் வரிகொடா இயக்கம்!

சிங்கள மொழிவெறியருக்கு எதிராக அறப்போராட்டம்

ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அணிவகுப்பர்!

தனிநாடுகோரும் தமிழரசுக் கட்சியின் தீவிரமுயற்சி

இலங்கையில் தமிழர்கள், தங்களது நியாயமான உரிமைகளை நிலைநாட்டிக்கொள்வதற்காக வரி கொடா இயக்கம் நடத்துவர் என்று தெரியவருகிறது.

வரும் ஆகஸ்டுத் திங்கள் 20-ந் தேதியன்று இலங்கை தமிழரசுக் கழகத்தவர், 'சிங்களம் மட்டுமே அரசாங்க மொழி' என்ற சட்டத்திற்கு எதிராக ஒரு போராட்ட இயக்கம் துவக்குகின்றனர்.

இந்தப் போராட்டங்களில் ஆயிரக்கணக்கான தமிழ் வாலிபர்கள் பங்கு பெறுவர் என்று தெரியவருகிறது.

18,000 தொண்டர்கள்

போராட்டம் துவங்கும் நாளன்று 18,000 தொண்டர்கள், மோட்டார் சைக்கிள்களில் ஏறிக்கொண்டு வீதி வலம் வருவர். இந்த மோட்டார் சைக்கிள்களின் பதிவு எண்களோடு பொறிக்கப்படும் சிங்கள எழுத்திற்குப் பதிலாக தமிழ் எழுத்து பொறிக்கப்பட்டிருக்கும்.

போராட்டம் வளரும்

போராட்டம் படிப்படியாக வளரும் என்று தெரியவருகிறது.

சட்டங்களை மீறி நீதிமன்றங்கள்முன் மறியல் செய்தல்— சர்க்காருக்கு எழுதும் கடிதங்களைத் தமிழிலேயே எழுதுதல்—தடையை மீறிப் பொதுக்கூட்டங்கள் நடத்துதல் என்று,படிப்படியாகப் போராட்டங்களை நடத்துவதுடன், தமிழர்கள் வாழும் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று தமிழர்களுக்கு தேசிய உணர்வும் ஊட்டப்படும் என்றும் கூறப்படுகிறது.

தனி நாடு

தமிழரசுக் கழகம்தான் இலங்கைத் தமிழரின் மிகப் பெரிய கட்சி என்றும், இவர்கள் தமிழருக்கென தனிச் சுதந்திரநாடு வேண்டுமெனக் கோருவதும் தெரிந்ததேயாகும்.

வரிகொடா இயக்கம்

வளரும் போராட்டங்கள் கடைசியாக தங்கள் இலட்சியத்தை ஈடேற்றிக்கொள்வதற்காக வரிகொடா இயக்கம் நடத்துகிற எல்லைக்கு இழுத்துச் செல்லும் என்றும் கூறப்படுகிறது.

பண்டிதரும் பண்டாவும் தமிழர் பிரச்சினைபற்றி பேசமாட்டார்களாம்!

அணுகுண்டு சோதனைபற்றிய ஆசிய கொள்கையே வகுப்பராம்

எர்ணகுளம், மே 2—

இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவரான சர் எட்வின் விஜய வர்த்தனே என்பார் இங்கு பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"பண்டித நேரு இலங்கைக்கு வரச் சம்மதித்திருக்கிறார்; அவர் அங்கு வருவது, புத்த விழாவில் கலந்து கொள்வதற்குத்தான்.

"அவரும் இலங்கைப் பிரதமர் பண்டார நாயகாவும் சந்தித்துப் பேசுகையில், அவர்கள், அணுகுண்டுப்பரிசோதனைகளைத் தடை செய்யும் பிரச்சினை, அதுகுறித்து ஆசிய நாடுகளின் கொள்கை இவை பற்றித்தான் பேசுவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

"அவர்கள், இலங்கைத் தமிழர் தம் மொழிக் கிளர்ச்சி பற்றியோ, இலங்கைத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கும் பிரச்சினை பற்றியோ பேசுவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படவில்லை."

காங்கிரசில் தலைவிரித்தாடும் வகுப்புவாத உணர்வு

'ஒழித்துக்கட்ட முயலுவேன்' என்கிறார் மைசூர் முதலமைச்சர்

பதவி பறிபோனாலும் அக்கறை இல்லை என்கிறார்

ஊப்ளி, மே 3—

"வகுப்புவாத உணர்வு தன்னிடம் கிடையாதென்று ஒவ்வொரு காங்கிரஸ் ஊழியரும் கூறிக்கொள்கின்றனர்; ஆனால் உள்ளுக்குள் எல்லோருமே வகுப்புவாதிகளாகத்தான் இருக்கின்றனர். அமைச்சர்கள் நியமனத்தின்போது இந்த உணர்வை நான் விசேடமாகக் கண்டறிந்தேன். என்னைப் பொறுத்தவரையில் இந்த மனப்பான்மையை ஒழித்துக் கட்ட உறுதி பூண்டிருக்கிறேன்; இதனால் என்ன நேரிட்டாலும் சரி—முதலமைச்சர் பதவி பறிபோனாலும் சரி— அக்கறை இல்லை"

என்று, தார்வார் மாவட்ட காங்கிரஸ் ஊழியர் மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில், மைசூர் முதலமைச்சர் நிசலிங்கப்பா குறிப்பிட்டதாகச் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

நேசம் வேண்டி நிற்கும் நேரு பெருமகனுக்குப் பண்டாதரும் பரிசு!

குடியுரிமை கோரியவர்கள் எட்டு இலட்சம் பேர்கள்

ஆறரை இலட்சம் பேருக்கு உரிமை மறுக்கப்படுமாம்

இலங்கைவாழ் தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்படும் கொடுமை

கொழும்பு, மே 2—

இலங்கையில் தமிழர்கள் 2,37,034 மனுக்கள் மூலம் எட்டு இட்சத்திற்கும் அதிகமானோர் குடியுரிமை கோரியிருந்தனர்.

இந்த மனுக்களில் இதுவரை—1947 பிப்ரவரிவரை—1,79,789 மனுக்கள் பைசலாகி விட்டது என்றும், இதன்மூலம் 55,600 பேர்களுக்கு மட்டுமே குடிரிமை தரப்பட்டது என்றும், 5,75,000 பேர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டுவிட்டது என்றும் கூறப்படுகிறது.

இதே வேகத்தில் மனுக்கள் பைசலாகுமானால், வரும் ஆகஸ்டு திங்களுக்குள், எல்லா மனுக்களும் பைசலாகிவிடும் என்றும், இதனால் சுமார் ஆறரை இலட்சம் பேர் 'நாடற்ற'வர்களாக்கப் படுவர் என்றும் கூறப்படுகிறது.

வேலை தேடித் தரும் நிலையங்கள்

மாவட்டந்தோறும் ஏற்படும்

திருவனந்தபுரம், மே 1—

கேரள மாநிலத்தில் தற்போது நான்கு வேலை தடித் தரும் நிலையங்களே இருப்பதால், இனி ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலை தேடித் தரும் நிலையம் ஏற்படுத்த கேரள அரசாங்கம் முயற்சி செய்து வருகிறதாம்.

அளவுகடந்த செலவின் எதிரொலியா?

சீனாவில் கனரகத் தொழில் முன்னேற்றத்திற்காக அதிகப் பணம் செலவிடப்பட்டுள்ளதால், உணவு, துணிமணிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாம்.

ஏற்காடு மறு தேர்தல்

வாக்குப் பதிவு நேரங்கள்

சென்னை, மே 3—

சென்னை சட்டசபைக்கு ஏற்காடு தொகுதியில் 27-ந் தேதியன்று தேர்தல் நடைபெறும்.

காலை 7 மணி முதல் பகல் 12-மணி வரையிலும், மீண்டும் பகல் 1 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் வாக்காளர்கள் வாக்குப் பதிவு செய்ய அனுமதிக்கப் படுவார்கள்.

மாநில சர்க்கார்களுக்கு திட்டக் குழு உத்தரவு

இந்தூர், மே 1—

பல்வேறு தொழில்களில் நிர்வாகிகள்—தொழிலாளர் உறவு நிலைபற்றி விசாரணை செய்யுமாறு மாநில சர்க்கார்களுக்கு திட்டக் குழு உத்திரவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ரூ.180 இலட்சம் செலவில் சட்டசபைக் கட்டிடம்

நீதிமன்ற விசாரணைக்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாம்

பெங்களூர், மே 1—

மைசூர் மாநில சட்டசபையின் புதிய கட்டிடம் ரூ. 180 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. கட்டிட நிர்மாணம் பற்றி இலாகா ரீதியாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இதுபற்றி நீதிமன்ற விசாரணைக்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக மாராமத்து அமைச்சர் கூறியுள்ளார்.

கூட்டுறவு பண்ணைமுறை ஏற்றதல்லவாம்!

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிடுமாம்

"வேறு நாடுகளைப் பின்பற்றி இந்தியாவிலும் கூட்டுப் பண்ணை முறையை மேற்கொள்வது புத்திசாலித்தனமல்ல; கூட்டுப்பண்ணை முறையால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிடும். எனவே, பெரிய தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் அதிகரிக்கச் செய்த பின்னரே கூட்டுப் பண்ணை முறையை மேற்கொள்ள வேண்டும்.

"கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதாலும் நாட்டிற்கு அதிக நன்மை ஏற்பட்டு விடாது"

என்று, உ. பி. முதலமைச்சர் டாக்டர் சம்பூர்ணானந்த் தெரிவித்துள்ளார்.

டில்லியில் தடியடி! கண்ணீர்புகைப் பிரயோகம்!

வீட்டு வேலைக்காரர்கள் போராட்டம்

அந்நிய நாட்டுத் தூதுவர்கள் வசிக்குமிடமான சாணக்கியபுரியில் வீட்டு வேலை செய்பவர்கள் ஒன்றுகூடி ஒரு ஊர்வலம் நடத்தியுள்ளனர். அதில் கலந்து கொள்ளுமாறு ஒரு அதிகாரியின் வீட்டு வேலைக்காரனை வற்புறுத்தியபோது கலகம் ஏற்பட்டதாம்.

உடனே போலீசார் விரைந்து வந்து 34 பேர்களைக் கைது செய்துள்ளனர்.

அன்று மாலை சுமார் 300 வேலைக்காரர்கள் போலீஸ் நிலையத்தின் முன்கூடி கைது செய்தவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்தனர் என்றும், இதனைத் தொடர்ந்து மோதுதல் ஏற்பட்டதாகவும், அவர்களைக் கலைப்பதற்கு இலேசாகத் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், மற்றும் 11 பேர் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இம்மோதுதலில் ஒரு போலீஸ் அதிகாரிக்கும் 17 போலீசாருக்கும் காயமேற்பட்டுள்ளது. இறுதியாகக் கண்ணீர்ப்புகைப் பிரயோகித்து போலீசார் அமைதியை நிலைநாட்டினராம்.

நம் நாடு

சென்னை 3—5—57 வெள்ளி

தொழிற் சங்கங்கள்!

நேற்று முன்தினம் தலைநகரில் நடைபெற்ற மே தின விழாக்கூட்டம் ஒன்றில், பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் நமது அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் அவர்களும் தொழிற் சங்க இயக்கத்தில் கழகத்தின் பங்கு குறித்தும், தொழிற் சங்கங்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இருக்கவேண்டிய உறவுகள் குறித்தும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர் இயக்கத்தில் தி. மு. கழகம் நேரடியாகப் பங்கு பெறவேண்டிய அவசியம் நாளும் நாளும் வலியுறுத்தப் பட்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில், அவர்களின் கருத்துக்கள், தமிழ்நாட்டு அரசியல்வாதிகளினுடையவும், தொழிற் சங்கத் தலைவர்களினுடையவும் கூரிய அவசரமான கவனத்திற்குரியனவாகும்.

தொழிற் சங்கத்தில் கட்சி வேற்றுமை பாராட்டாது, ஒரு கட்சி, வெறிகொண்ட நிலையில் குறிப்பிட்ட தொழிற் சங்கங்களைத் தங்களின் கைக்கருவிகளாக்கிக் கொள்ளாமல், எல்லா வகையான அரசியல் கருத்துடைய தொழிலாளர்களின் நலன்களையும் பாரபட்சமின்றி கவனித்துப் பாதுகாத்துவரும் தொழிற் சங்கங்களின் தலைவர்கள் தமிழ்நாட்டில் மிகச் சொற்பமே எனலாம். இந்த நிலையே, வருந்துதற்கும் கண்டனத்திற்கும்உரியது என்றிருக்க, சில தொழிற் சங்கத் தலைவர்கள், சங்கத்தில் அங்கத்தினராயிருக்கும் மாற்றுக் கருத்துடைய தொழிலாளர்கள்—அதிலும் குறிப்பாகத் தி. மு. கழகப் பற்றுக்கொண்டவர்கள் பாதிக்கப்படும்போது, அவர்களை அலட்சியம் செய்வதும், அவர்கள் தலைவர்களாக பெருமதிப்புக் காட்டுகிற நமது கழக முன்னோடிகளை இழித்தும் பழித்தும், கேலி பேசுவதுமான போக்கினைக் கைக்கொண்டிருக்கின்றனர். இதனைத் தாங்கிக் கொள்ள இயற்கையாகவே இயலாது போய்விடுகின்ற நிலையில், நமது கழகப் பற்றுக் கொண்ட தொழிலாளர்கள், தங்கள் நலன் காக்கத் தனியாக தொழிற்சங்கம் ஒன்று துவங்குவதைத் தவிர வேறு வழி இல்லை என்பதை கழகத் தலைமைக்கு வலியுறுத்தியுள்ளனர்.

இந்த முடிவுக்கு வருமாறு இதர கட்சிகளைச் சேர்ந்தவர்கள், நமது தோழர்களைத் துரத்துகின்றனர்.

பொதுவாக, தொழிலாளர் அணிவகுப்புகள் பிளவுபடக் கூடாது என்ற பெருநோக்குக் கொண்ட நாம், பன்முறை இந்த நிலையைத் தெளிவாக்கி தமிழ்நாட்டுத் தொழிற் சங்கவாதிகளிடமிருந்து, ஒரு பெருந்தன்மையான மாற்றத்தை எதிர்பார்த்து ஏமாந்தோம்.

பெருந்தன்மை என்பது, ஒருவன் கொடுத்துக் கொண்டே இருப்பான்; மற்றவன் திருப்பியே தரமாட்டான் என்றிருந்தால், பலன் இல்லை. 'பெருந்தன்மை என்பது, கொடுத்து வாங்கப்படவேண்டிய ஒன்று; ஒரு வழி வியாபாரம் அல்ல' என்று நமது அண்ணா அவர்கள் சட்டசபையில் கூறியதை, நேற்று முன்னாள் மே தினக் கூட்டத்திலும் குறிப்பிட்டார்கள். நாம், அதனை இங்கு மீண்டும் எடுத்துரைக்கிறோம்.

அந்தக் கூட்டத்தில் நமது பொதுச்செயலாளர் அவர்கள் எடுத்துரைத்தபடி, எந்தக் கட்சி சார்புமின்றி, பொதுத் தன்மை கெடாமல் தொழிற் சங்கங்கள் இயங்குமானால், நமது கழகத் தோழர்கள் புதிய தொழிற் சங்கங்களை—போட்டிச் சங்கங்களைத் துவக்க மாட்டார்கள்.

ஆனால், பொது நெறி பிறழ்ந்து, தொழிலாளர் நலன் என்ற பிரதான நோக்கத்திலிருந்து விலகி, குறுகிய கட்சி வெறிக்கு ஆளாகி, நமது கழகத்தில் ஈடுபாடுகொண்ட தொழிலாளர்களைப் பழிவாங்கும் நோக்குடன் தொழிற் சங்கத் தலைவர்கள் நடந்துகொள்வார்களேயானால், நமது தோழர்கள் தங்கள் நலன் பேண, தங்களையும் தாங்கள் சார்ந்திருக்கும் கழகத்தையும் காப்பாற்றிக் கொள்ள, தனிச் சங்கம் அமைப்பதைத் தவிர வேறு நியதி இருக்காது என்பதைத் தமிழக தொழிற் சங்க வாதிகளுக்கு அறிவுறுத்துகிறோம்.

இதற்கிடையில், நாடெங்கிலும்உள்ள நமது கழகத் தோழர்கள், இன்னும் ஒரு சங்கம் என்ற அமைப்பிற்குட்படாத, இதரர் முயற்சித்துத் தோல்வி கண்டுவிட்ட துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்களை—பாட்டாளிகளை எல்லாம் திரட்டி, அவர்களுக்கான முன்னேற்றச் சங்கங்கள் காணும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மே தின விழாவில் நாம் பெறக்கூடிய புத்துணர்வும், மகிழ்ச்சியும், எழுச்சியும் அந்தப் பணியில் நம்மை ஈடுபடுத்த பயன்படட்டும்.

சென்னையில் சீரும் சிறப்புமிக்க மேவிழா

பல்லாயிரக்கணக்கான பாட்டாளிப் பெருமக்கள் கலந்துகொண்ட வைபவம்

சிம்சன் குருப் கம்பெனி தி. மு. கழகத் தோழர்களின் பெருமைக்குரிய பணி

கழக எம்.எல்.ஏ.க்களுக்கு பாராட்டு

'உழைப்பவர்களுக்கே உலகம் என்ற இலட்சியம் ஈடேற இறுதிவரை உழைப்போம்'

முன்னணி வீரர்களின் முழக்கம்

சென்னை, மே 2—

உலகெங்கும் பெருமிதத்துடன் கொண்டாடப்படும் மே தின விழா சென்னை நகரிலும் வெகு சீரும் சிறப்பும் மிளிரக் கொண்டாடப்பட்டது.

சிம்சன் அண்டு குரூப் கம்பெனிகளில் பணியாற்றும் தி. மு. கழகத் தொழிலாளர் சார்பில் நேற்று மாலை நேப்பியர் பூங்கா மைதானத்தில் மே தின விழாவும், தி. மு. கழக எம்.எல்.ஏ.-க்களுக்குப் பாராட்டு விழாவும் நடைபெற்றது.

கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும்—பாட்டாளிகளும்—தாய்மார்களும்—நடுத்தர மக்களும் கலந்துகொண்டு, அண்ணா அவர்களின் பேருரையையும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் மே தினச் செய்தியையும் பெற்றுச் சென்றனர்.

நகரில் பல்வேறு இடங்களில், பல கட்சிகளின் சார்பில் மே விழாக் கூட்டங்கள் நடைபெற்றபோதும், இந்தக் கூட்டத்தில் தான் வழக்கம்போல எல்லாப் பகுதி மக்களும் பெருவாரியாகக் கலந்துகொண்டனர் என்பது—கழகத்திற்குப் பெருமை தரும்—இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

தலைமை உரை

கூட்டம் இரவு 7 மணியளவில் துவங்கிற்று. துவக்கத்தில் பலர் இயக்கப் பாடல்கள் பாடினர்.

பின்னர், தோழர் வி. எஸ். கோவிந்தராசன் அவர்கள் தலைமை உரை ஆற்றுகையில், சிம்சன் கம்பெனி தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த சிலர், இதுபோல தொழிலாளர் சார்பில் கூட்டம் நடத்துவதைக் கூடாது எனக் கூறுவதைக் கண்டித்துவிட்டுப் பேசியதாவது :—

"ஒருவர், தான் கொண்டிருக்கிற இலட்சியத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமெனக் கூற எவருக்கும் உரிமை இல்லை. நாங்கள் சிம்சன் கம்பெனி தொழிலாளர்களாயிருப்பதால், தி. மு. கழகத்தில் இருக்கக் கூடாது என்று எவரேனும் கூறினால் அதற்காக நாங்கள் மிரண்டுவிட மாட்டோம்.

"தொழிற்சங்கம் என்பது ஒரு குடும்பம் போன்றதாகும். குடும்பத்தில் உள்ள பல பிள்ளைகளும் வெவ்வேறு அரசியல் கட்சிக்காரர்களானாலும், வீட்டுக்குள் அவர்கள் எல்லோரும் ஒரு குடும்பத்துப் பிள்ளைகள் என்பதைப் போல், வெளியில் தொழிலாளர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் தொழிற்சங்கத்திற்குள், எல்லோரும் தொழிலாளர்கள் என்று ஒன்றுபட்டு இருக்க வேண்டும். இந்த நிலையைத் தான் நாங்கள் விரும்புகிறோம்."

மேலும் பேசிய அவர், சிலர் தி. மு. க.-வினர் சிம்சன் குரூப் தொழிலாளர் சங்கத்தைக் கைப்பற்ற முயற்சிப்பதாக எழுப்பும் குற்றச்சாட்டு அர்த்தமற்றது—ஆதாரமற்றது என்பதை விளக்கினர்.

பின்னர், தோழர்கள் கரிகாலன், மணிவண்ணன் ஆகியோர் தொழிற்சங்க நடவடிக்கைகள் பற்றியும், தொழிலாளர் நிலை குறித்தும் சிறிது நேரம் பேசினர்.

நன்னம்பிக்கை ஊட்டியவர் எவர்?

அடுத்து தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் பேசுகையில், முதன் முதலில் தொழிலாளருக்கு வாழ்வில் தன்னம்பிக்கையும், பகுத்தறிவும் ஊட்டியவர்கள் சுயமரியாதை இயக்கத்தவர்தான் என்று எடுத்துக்கூறி, மே தின விழாவில் கலந்துகொள்ள திராவிட முன்னேற்றக் கழகம் முழு உரிமையும் தகுதியும் படைத்தது என்பதை விளக்கினர்.

எம். எல். ஏ.-க்கள் உறுதி மொழி

அடுத்து தோழர்கள் எஸ். எம். அண்ணாமலை, எம். செல்வராஜ், டி. இருசப்பன், சி. நடராசன், எம். பி. சுப்பிரமணியம், தோழியர் சத்திய வாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, க. அன்பழகன் ஆகிய எம்.எல்.ஏ.க்கள், தங்களுக்குத் தரப்பட்ட பாராட்டுதல்களுக்கு நன்றி கூறிக் கொண்டதுடன் தொழிலாளர் நலன்களுக்காகத் தாங்கள், சட்டசபையில், இயன்ற அளவு-இடைவிடாது பாடுபடுவதாக உறுதி மொழியும் அளித்ததோடு, திராவிட முன்னேற்றக் கழகம்தான், பொதுவாக நாட்டு மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உண்மையுடன் பாடுபடக்கூடிய ஒரு கட்சி என்பதையும் விளக்கினர்.

இரா. நெடுஞ்செழியன்

அடுத்து பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மேதினி யெங்கும் கொண்டாடப்படும் மே தின விழாவின் சிறப்பை எடுத்துரைத்து, திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர் நலனில் காட்டிவரும் அக்கறையை விளக்கிக் கூறி, தொழிற் சங்கங்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையே இருக்கவேண்டிய உறவு முறையைச் சுட்டிக் காட்டி, தாயக விடுதலையில்தான் திராவிடத்துத் தொழிலாளரின் நல்வாழ்வு அடங்கிக் கிடக்கிறது என்பதைத் தெளிவாக்கி, 'உழைப்பவர்களுக்கே உலகம் என்ற இலட்சியம் ஈடேறும்வரை இறுதிவரை போராடுவோம்' என்று முழக்கமிட்டு, தொழிலாளர் பெருமக்களுக்கு மே தினச் செய்தி வழங்கினர்.

அண்ணா

இறுதியாக அண்ணா அவர்கள், கூடியிருந்தோரின் பெரும் மகிழ்ச்சிப் பெருக்கால் எழுந்த பெரும் ஆரவாரப் பேரொலிக்கிடையே எழுந்து, தொழிற் சங்கங்கள், அதில் கழகத்தின் ஈடுபாடு, வர்க்கப் போராட்டம், கம்யூனிஸ்டுகளின் தவறான சித்தாந்தம் இவை குறித்து வெகு அரிய தோர் கருத்துரை நல்கினார்கள்.

கைத்தறி ஆடை அணிவிப்பு

அண்ணா, பொதுச்செயலாளர், மற்றும் எம். எல். ஏ.-க்களுக்கு தொழிலாளர் சார்பிலும், கழகக் கிளைகள், மன்றங்கள் சார்பிலும் கைத்தறித் துணிகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

பெயர் சூட்டல்

அண்ணா அவர்கள் இரண்டு குழந்தைகளுக்குப் பெயர் சூட்டினார்கள்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிதே முடிவுற்றது. (ந. - நி.)

சென்னையில் பி. சி. ஜி. பவுடர் தயாரிப்பு நிலையமாம்!

ஐதராபாத், எப். 30—

கிண்டியில் உள்ள பி. சி. ஜி. தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையம் பி. சி. ஜி. பவுடர் தயாரிப்பு வேலையில் ஈடுபடுமாம்.

டில்லியில் கூடிய எலும்புருக்கி நோய் தடுப்புக் குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

பி. சி. ஜி. பவுடர் பல நன்மைகளைத் தரவல்லதாம்.

குஷ்டரோகத் தடுப்புக்கு பி. சி. ஜி. பயன்படுமா என்பது பற்றியும் குழு ஆராய்ந்து வருகிறதாம்.

சரணடைந்தனராம்!

உகில்லாங், எப். 30—

நாகர்களின் தலைவரான பிசோவை போலீஸ் தேடிவருகிறதாம்! அவரின் இரு குமாரர்களும் சரணடைந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளது.

ரஷ்யாவில் மொத்தம் 1,95,000 பொ[illegible] கல்விப் பள்ளிகளுக்குமேல் உள்ளனவாம்!

இவற்றில் 2 கோடியே 80 - இலட்சம் மாணவர்களுக்குமேல் படித்து வருகின்றனராம்!

'ஓட்டு' சேகரிக்கும் நோக்கம் கூடாது

சட்டமியற்றல் குறித்து ஆச்சாரியார்

"ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்று சட்டம். சட்டத்திற்கான விதிமுறைகளை அனுசரிக்காவிடில், ஜனநாயகம் வீழ்ந்துபடும். சட்டம், சர்க்காராலும், மக்களாலும் ஒருங்கே மதிக்கப்பட்டாக வேண்டும். சட்டம் மதிக்கப்படவேண்டுமென விழைந்தால், நாம் நல்ல சட்டங்களை இயற்றியாக வேண்டும். ஆனால் இதை, யார் சட்டமியற்றுவோருக்குச் சொல்லுவது? தங்கள் தங்கள் நலன்களை வளர்த்துக் கொள்வதற்காக, மக்களில் ஒவ்வொரு பிரிவினரும் சட்டமியற்றுமாறு சர்க்காரைக் கோருவர்.

"ஆனால், சட்டங்கள் நேர்மையானவையாகவும், உபயோகமானவையாகவும் இருக்க வேண்டும்.

"எந்த ஒரு சட்டமும் நல்ல சட்டமாக இருக்கவேண்டுமானால், அதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு—நமக்கு, ஜனநாயகம் மற்றும் மக்களின் நலனுக்காக நல்ல சட்டங்கள் இருந்தாகவேண்டும்.

"சட்டசபை எந்தச் சட்டத்தை வேண்டுமானாலும் நிறைவேற்றலாம் என்பது உண்மைதான்: ஆனால் அது உபயோககரமானது என்பது சரியல்ல!

"சட்டங்களை இயற்றும்போது, அதன் முக்கியமான நோக்கம் 'ஓட்டு'ப் பெறுவதாக இருத்தலாகாது"

என்று ஆச்சாரியார் அவர்கள், நெல்லூர் வழக்கறிஞர் சங்கக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

19,000 தொழிலாளர் பணியாற்றும் திட்டம்

11-இலட்சம் ஏகர் நிலம் நீர்ப்பாசன வசதிபெறும்

போபால், மே 1—

பல்வேறு நோக்கங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள சம்பால் திட்டம் மத்திய இந்தியாவின் மிகப் பெரிய திட்டமாகும். இங்கு 19,000 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இதற்கு மொத்தம் ரூ. 3,143 இலட்சம் செலவிடப்படுமாம்.

திட்டம் முடிந்ததும் 92,000 கிலோவாட் மின்சார சக்தியும், 11,00,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியும் கிடைக்குமாம். 1959-ல் திட்டம் நிறைவேறும் என்றும் இதனால் இராஜஸ்தான், மத்தியப் பிரதேச மாநிலங்கள் பயனடையுமென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

ஏழையின் வியர்வையைத் துடைத்தால் அதுவே ஆண்டவனுக்கு செய்யும் அபிஷேகம்

இதைச் சொல்லும் பண்டிதர் ஆசியாவின் 'ஜோதி'- நாங்கள் மட்டும் நாத்திகர்களா?

சென்னையில் அண்ணு கேள்வி

23—4—57-ல், சென்னை பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்கள் சார்பில், தி. மு. கழக எம். எல். ஏ.-க்களுக்கு நடைபெற்ற பாராட்டுவிழாக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி முன்னர் வெளிவந்துள்ளது; அவரது பேச்சின் மற்றுமோர் பகுதி இங்கு தரப்படுகிறது:—

"யார் நாத்திகர்கள்—யார் ஆத்திகர்கள்—என்று, மக்களே சந்தேகப்படவில்லை; ஆனுல், சில தலைவர்களுக்கு அந்தச் சந்தேகம் இருக்கிறது. அந்தச் சந்தேகத்திலே ஒன்றுதான் நண்பர் சிவஞானத்திற்கு வந்திருக்கிறது—'அண்ணுதுரை ஆத்திகர் என்றும், ஒன்றே குலம்; ஒருவனே தேவன்—என்ற முறையைப் பின்பற்றுகிறவர் என்றும் சொல்லப்படுகிறது; ஆனுல், அவர், ஆண்டவனை எம்முறையில் வழிபடுகிருர்?' என்று சிவஞானம் கேட்டால், நான் அதற்கு என்ன பதில் சொல்லுவது? ஆண்டவனை வழிபட்ட பக்தர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு முறையிலே வணங்கியுள்ளனர்; இயற்பகை நாயனுர் ஒரு முறையிலே வழிபட்டார்; 'இறைவன்' என்று கேட்ட நேரத்தில் இல்லற கிழத்தியைப் பின்னுல் அனுப்பி, அதை 'பக்தி' என்றுர்கள்; சிறுதொண்ட நாயனுர், பிள்ளையை அறுத்துக் கறியாக்கி, அதன் மூலமாக தனது பக்தியைக் காட்டிக்கொண்டார்; இராமதாசர், சர்க்கார் பணத்தைக்கொண்டு கோயில்கட்டி அதன்மூலம் தன் பக்தியைக் காட்டிக்கொண்டார்; மாணிக்கவாசகர், குதிரை வாங்குவதற்கென கொடுத்தனுப்பிய பணத்தை கோயில் கட்டுவதிலே செலவழித்து, அதன் மூலம் தனது பக்தியைக் காட்டிக்கொண்டார்.

"இப்படி, பக்தியைக் காட்டிக்கொள்ளுவதற்கு இவர்கள் வழிபடுகின்ற ஆழ்வாராதிகள்—நாயன்மார்களுக்கே விதவிதமான வழிகள் இருந்தபோது, அண்ணுதுரை வழிபடும் முறை பற்றி என்ன அக்கறை? நாள் இப்பொழுது சொல்லுகிறேன்—நான் ஆண்டவனிடத்திலே ஐக்கியமாகி விட்டேன்; இல்லை என்று சொல்லுவதற்கு யாருக்கு என்ன அத்தாட்சி இருக்கிறது? இந்நேரத்தில் நான் உங்களையே பார்த்துக்கொண்டிருக்கின்றேன்; பார்த்துக்கொண்டிருக்கின்ற இதே நேரத்தில், நீங்களெல்லாம் ஒரே உருவமாகி என்னுடைய கண் பார்வையிலே ஒரு பெரிய ஆண்டவன் தெரிவதாக எண்ணுகிறேன்; எனக்குத் தெரிகிறது அந்த உருவம்—நான் செய்த புண்ணியம்—எனக்குத் தெரிகிறது; நீங்கள் பாவிகள்—உங்களுக்குத் தெரியவில்லை!

"என் மனதுக்குப் பிடித்தமான வழியில் ஆண்டவனை வழிபடுகிறேன்; ஒரு ஏழையின் வியர்வையைத் துடைத்தால் அதை, ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்ததாகக் கருதுகிறேன்; பட்டப்பகலில் கால் கொதிக்கின்ற வெயிலில் நடந்து செல்பவனுக்கு ஒரு பழைய செருப்பை யாராவது வாங்கி இனமாகக் கொடுத்தால் அது, ஆண்டவனுக்குப் பட்டுப்பட்டாடை கொடுப்பதைவிட பெரிய பக்தியென்று கருதுகிறேன்; கோயில் கோபுரத்திலுள்ள தங்கக் கலசத்திற்கு மெருகு பூசுவதைவிட, அணிந்திருக்கிற ஆடையில், ஏறியிருக்கின்ற கரையை—அழுக்கைப்போக்க ஒரு சோப் வாங்கிக் கொடுப்பவர்களைப் பெரிய பக்திமான் என்றுகொண்டாடுகிறேன். இதையெல்லாம் வேண்டாமென்று சொல்லியிருக்கின்றது நீங்கள் படித்திருக்கின்ற வேதத்தில்— திருவாசகத்தில் — பக்தர்களின் கதைகளில்—மதத் தத்துவத்தில்?

"பக்தி என்றுல் 20—30 பேர் வேதபாராயணம் செய்ய, நாலைந்துபேர் தீவட்டி பிடிக்க, 10 - 15 பேர் தொலைவிலிருந்து வேடிக்கை பார்க்க, ஒரு வாகனத்திலே சாமியை அமர்த்தி, அதற்குப் பக்கத்திலே இரண்டு அர்ச்சகர் நின்றுகொண்டு, ஒரு அர்ச்சகர் மற்றொரு அர்ச்சகரிடம் குடும்பப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதுதான் பக்தியா? இதற்குப் பெயரா பக்தி? இந்த முறையிலே என்னை ஆண்டவனை வழிபடச் சொன்னுல் நான் சம்மதிக்க முடியுமா?

"நான் ஆண்டவனை வழிபடுவது ஏழைகளின் துயரை நீக்குவதற்கு என்ற முறையில் இருக்குமானுல் அவ்வாறுதான் செய்வேன்; அந்த முறையிலே நான், பணியாற்றுகின்ற நேரம் தவிர மற்ற எல்லா நேரத்திலும் ஆண்டவனைத்தான் வழிபட்டுக் கொண்டிருக்கிறேன். அதைப்பற்றி நண்பர் சிவஞானத்திற்குச் சந்தேகம் வருவானேன்? அவரது சந்தேகம் அவருக்கு நன்றுகத் தெரியும்; அந்த சந்தேகத்தை மக்கள் உள்ளத்திலே புகுத்தினுல் இந்த 17 இலட்சத்தில் கொஞ்சம் குறைகிறதா பார்க்கலாம் என்பதுதான் அந்தச் சந்தேகம். ஆனுல் 17 இலட்சம் மக்கள் நாளாக நாளாக வளர்ந்து வருவார்களே தவிர, 'இவர்களெல்லாம் சாமியில்லாத கட்சி'யென்று எந்த மக்களும் எங்களைத் தள்ளிவிடமாட்டார்கள்.

"பண்டித நேரு எழுதியிருக்கிருர்:— 'ஆண்டவன் என்ற உணர்ச்சி அச்சத்திலே இருந்து பிறந்ததே தவிர, அறிவிலே இருந்து பிறந்தது அல்ல'— என்று!

"அவரை, எந்தக் கூட்டத்திலே சேர்க்கிறீர்கள்? அவரை நீங்கள், 'ஆசியாவின் ஜோதி' என்கிறீர்களே! என்னை அவ்வளவு பெரிய இடத்திற்கு ஜோதியாக்க வேண்டாம்; நான் ஒரு சாதாரணமானவன் என்றுலும், நாத்திகன் என்று சொல்லாமல் ஆத்திகன் என்று என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? அவர் சொன்னுல் அது மேதாவித்தனமாகிறது; நான் அதே கருத்தை இன்னும் கொஞ்சம் நாசூக்காகச் சொன்னுல், உடன்பிறந்த தோஷத்தால்-இந்த இனத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால் —இந்த நாட்டுக்காரன் என்ற காரணத்தால் இது நாத்திகமாகத் தோன்றுகிறது. ஆனுல், எங்கோ தொலைவிலே இருக்கின்றவர்கள், எதை எதையோ சொல்லுகிருர்கள்; அவை அத்தனையும் மேதாவித்தனமாகப்படுகிறது.

"ஆண்டவன் என்ற உணர்ச்சி அச்சத்திலேயிருந்து பிறந்ததே தவிர அறிவிலேயிருந்து பிறந்தது அல்ல — என்று, நேரு சொல்லுவதின் பொருள் என்ன?

"ஆண்டவனை மனிதர்கள் தான் உண்டாக்கினுர்கள்; அறிவு பிறந்தபோதுஅல்ல—அச்சம் ஏற்பட்டபோது—பயம் வந்தபோது உண்டாக்கினுர்கள் என்று, பண்டித நேரு இவ்வளவு பச்சையாக நாத்திகம் பேசுகிருர். அவரைப் பாரத நாட்டுக்கு மட்டுமல்ல—'ஆசியாவிற்கே ஜோதி' என்கிறீர்கள். நாங்கள், ஆண்டவன் என்பது, 'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' என்று திட்டவட்டமாக—தேர்தலுக்கு முன்னுவிருந்தே சொல்லிவந்திருக்கிருேம். எங்களைப்பார்த்து நாத்திகர்கள் என்று சொல்லுகிறீர்கள் என்றுல், என்ன பொருள் அதற்கு? எதையோ சொல்லி மக்களை ஏமாற்றப்பார்க்கிருர்கள் என்பதைத் தவிர, வேறு என்ன இருக்க முடியும்?

"கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்—என்பதுதானே வேதாந்தத்தின் முடிவு! 'கண்டவர் விண்டிலர்'—ஆண்டவனை பார்த்தவர்கள் சொல்லவில்லை! 'விண்டவர் கண்டிலர்'—சொன்னவர்கள் பார்க்கவில்லை!

"ஒன்றே குலம்; ஒருவனே தேவன்—என்று நாங்கள் சொல்லுவதற்குக் காரணம், அந்த ஒரு தேவன் எப்படி இருப்பான் என்பதை விளக்குவதற்கு அல்ல! அந்த ஒரு தேவனை இன்னின்ன விதமாக நீங்கள் வழிபடுங்கள் என்று போதிப்பதற்கு நாங்கள் மத வாதிகள் அல்ல! அது மத வாதிகள் செய்யவேண்டிய காரியம்!

"அவர்களே எப்படி இறைவனைக் கும்பிடுகிருர்கள் என்றுல், சிலர் நின்றுகொண்டு கும்பிடுகிருர்கள்; சிலர் சாஷ்டாங்கமாகவே வணங்குகிருர்கள்; சிலர் முழங்கால் குதியிட்டு வணங்குகிருர்கள்; சிலர் தலையை நிலத்திலே தாழ்த்தி வணங்குகிருர்கள்; அன்றியும் நம்மிலே சில பக்தர்களின் தாம் குறைய குறைய வீதியிலே புரளுகிருர்கள்; வேல்குத்திக் கொள்கிருர்கள்; நாக்கில் சிலர் வேல் குத்திக்கொள்கிருர்கள்; வேப்பமரத்தைச் சுற்றுகின்றுர்கள். இப்படி, தாத்துக்கு ஏற்றபடி ஆண்டவனைக் கும்பிடுவது மாறிக்கொண்டே போகிறது. இப்படி இருக்கும்போது என்னைப் பார்த்து 'நீ எப்படி சாமி கும்பிடுகிருய்?' என்றுல் என்ன அர்த்தம்?

"இதை ஏன் இப்படிச் சொல்லுகின்றுர்கள் என்றுல், இந்த ஒரு ஆயுதத்தை வைத்துக் கோண்டு நம்மை வாட்டலாம்—வதைக்கலாம் என்று பழைய நாளிலே எண்ணிக் கோண்டிருந்ததைப்போல் இன்றையத் தினமும் எண்ணிக் கோண்டிருக்கிறுர்கள்; அது தவறு என்பதை நாடு இன்றைய தினம் காட்டியிருக்கின்றது."

இடைநிலைப் பள்ளிகளில் போதனமொழி

விருப்பமானுல் ஆங்கிலத்தை ஏற்கலாமென உத்தரவு

பம்பாய், எப். 30—

பம்பாய் மாநிலத்தில் இடைநிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான மொழியில் கல்வி கற்கலாம் என்று அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளது.

மேலும், ஆங்கிலத்தையே போதன மொழியாக மாற்றிக் கொள்வதையும் அரசாங்கம் தடுக்காது என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விதிகளின்படி மாணவர்களை, அவர்களுக்குத் தெரியாத மொழியில் பாடங்களைப் படிக்குமாறு நிர்ப்பந்திக்கப்படக்கூடாது.

வடநாட்டு அகதிகளுக்கு கடனுதவி அளிப்பதில் டில்லியின் தீவிரம்

விண்ணப்பங்களைக் கவனிப்பதில் முழுவேகம்

புதுடில்லி, மே. 2—

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வந்துள்ளவர்களுக்கு, புனர்வாழ்விப்பு நிதி நிர்வாக நிறுவனம் அளித்துவரும் கடன் உதவியில் இப்போது ரூ. 3,42,000 மதிப்புள்ள 61 கடன்களை அனுமதித்திருக்கிறது. மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வந்துள்ள ஒருவருக்குக் கடனுக ரூ. 5,000 வழங்கப்பட்டது.

1957 ஜனவரி இறுதிவரை அனுமதித்த ரூ. 12,35,22,000 கடனில் மொத்தம் ரூ. 10,37,50,000 விநியோகிக்கப்பட்டுவிட்டது.

1956-ம் ஆண்டு வரை, கடனுதவி கோரி அனுப்பப்பட்ட 87,508 விண்ணப்பங்களில் 74,947 விண்ணப்பங்கள் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

2-வது ஐந்தாண்டுத் திட்ட செலவு

ரூ. 900 கோடியாம்!

புதுடில்லி, மே 2—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின 2-வது ஆண்டு முதலீடு மொத்தம் ரூ. 900 கோடியாம்! இதில் மத்திய அரசாங்கத்தின் பங்கு ரூ. 465 கோடி என்றும், மாநில அரசுகளின் பங்கு ரூ. 435 கோடி என்றும் தெரிய வருகிறது.

விவசாய உற்பத்திப் பிரச்சினை இத்திட்டத்தில் முக்கியமாக வற்புறுத்தப்படுமோம்,

---

விலங்கினங்கள் பாதுகாப்பு இட அபிவிருத்திக்கு உதவி

புதுடில்லி, மே 2—

நீலகிரியில் முதுமலையில் உள்ள விலங்கினங்கள் பாதுகாப்பு இட அபிவிருத்திக்காக 1957—58-ம் ஆண்டுக்கு இந்திய அரசாங்கம் ரூ. 41,500 மானியமாக அளித்துள்ளதாம். இரண்டாவது திட்டத்தில் இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 6 இலட்சமாகும்.

மைசூர்—உதகை பாதையின் நடுவில் 120 சதுரமைல் பிரதேசத்தில் இந்த இடம் இருக்கிறது.

போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்

வன்னியர் சங்கம் கோருகிறது

திருச்செங்கோடு, மே 2—

சென்னை அமைச்சரவையில் வன்னியருக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்றும், தேர்தலில் வெற்றி பெற்ற இராமசாமி படையாச்சிக்கு அமைச்சரவையில் இடம் அளிக்காததற்கு வருத்தம் தெரிவித்தும் திருச்செங்கோடு வன்னியர் சங்கக் கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

நல்ல காலம் பிறக்குமா?

சென்னை, மே 2—

கிராம அதிகாரிகளின் கோரிக்கைகள் குறித்து சென்னை அரசாங்கம் ஆராய்ந்துவிட்டதாகவும், இதைப் பற்றிய அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரியவருகிறது.

ரஷ்யா அளித்த ரூ. 60 கோடி கடனுதவி

எந்தத் திட்டத்திற்குப் பயன்படும்?

புதுடில்லி, மே 1—

பண்டித நேருவின் தலைமையில் நடைபெற்ற திட்டக் குழுக் கூட்டத்தில், ரஷ்யா தர முன்வந்துள்ள ரூ. 60 கோடி கடன் உதவியை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றி ஆராயப்பட்டிருக்கிறது.

நாட்டின் கனரகத் தொழில் திட்டத்திற்கும், போர்பா நிலக்கரிச் சுரங்க அபிவிருத்திக்கும் இந்தக் கடனில் பெரும் பகுதியைப் பயன்படுத்தக்கூடுமோம்!

கிடைத்த வருமானம் பற்றி புள்ளி விவரம்

புதுடில்லி, எப். 30—

1957 பிப். மாதத்தில், இந்தியாவில், கடற் சுங்கம், தரைச் சுங்கம் ஆகியவை மூலமாக மொத்தம் ரூ. 14,49,00,000 வசூலாகியதாம்!

மத்திய'எக்சைஸ்'மூலம் மொத்தம் ரூ. 15,64,00,000 வசூலாகியதாம்!

1956 எப். மாதத்திலிருந்து 1957 பிப். மாதம் வரையுள்ள 11 மாதகாலத்தில், சுங்கம் மத்திய 'எக்சைஸ்' மூலம் ரூ. 330,27,00,000 வருமானம் கிடைத்ததாம்!

தமிழ்க்குடி பிறந்த மகனின்

தாராள நன்கொடை

மலேயா, மே 2—

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அரங்கசாமி (பிள்ளை) மலேயாவில் ஒரு பாங்கி ஊழியராக வாழ்க்கையைத் துவங்கி, பிறகு மொத்த விற்பனை வியாபாரியாகி, தான் சேர்த்த செல்வத்திலிருந்து ஒரு இலட்சம் மலேயா டாலரை நற்காரியங்களுக்கு வழங்கியுள்ளார்.

மலேயாவில் உள்ள எல்லாக் கூட்டுறவு நிலையங்களுக்கும், எல்லா இனத்தவருக்குமான கல்வி நிலையங்களுக்கும் நிலங்களும், ரொக்கப் பணமும் கிடைக்கும்.

ஏழை இந்தியத் தொழிலாளர்களும் மலேயருமாக தலா ஒரு ஏக்கர் நிலம் பெறுவர்; நிலத்தின் மதிப்பு 20,0000 டாலர்களாகும்.

பதவியிலிருந்து விலகி விடுவாராம்!

உணவு உற்பத்தி அதிகரிக்குமா?

முசௌரி, மே 2—

அடுத்த மூன்று ஆண்டுகளில் சமுதாய அபிவிருத்தித் திட்டப் பகுதிகளில் உணவு உற்பத்தி 50 சத விகிதம் அதிகரிக்கும் என்றும், இதை நிறைவேற்றுவிட்டால் தான் பதவியில் இருந்து விலகிக் கொள்வதாகவும் சமுதாய அபிவிருத்தி இலாகா அமைச்சர் எஸ். கே. டே, அபிவிருத்தி ஆணையாளர் மாநாட்டில் பேசுகையில் கூறியுள்ளார்.

இந்தியாவின் உற்பத்தி இலட்சண எதிரொலி

உணவுத் தானிய இறக்குமதி

புதுடில்லி, மே 1—

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு மார்ச் 31-ந் தேதி வரையில் 6 இலட்சம் மெட்ரிக் டன்களுக்கு மேல் உணவுத் தானியங்கள் வந்துள்ளன.

ஏப்ரல் திங்களில் மட்டும் 20,000 டன்கள் வந்துள்ளனவாம்.

வேறு வகையில், கடந்த ஜூலையிலிருந்து, இந்தியாவுக்கு 2,13,200 டன் கோதுமையும், 1,69,445 பேல் பருத்தியும் வந்துள்ளன.

சென்னை சர்க்கார் அபிவிருத்தித் திட்டங்கள்

இரு சட்டசபைகளின் கூட்டுக் கூட்டத்தில் கவர்னர் விளக்கம்

சென்னை, மே 3—

அறுவடைக்குப் பிறகும் உணவுப் பண்டங்களின் விலை இறங்கவில்லை என்பதை சென்னை கவர்னர் ஏ. ஜே. ஜான் அவர்கள், நேற்று முன்தினம் சட்டசபையின் கூட்டுக் கூட்டத்தில் பேசுகையில் ஒப்பியிருக்கிறார்.

அவர் தமது உரையில் மேலும் குறிப்பிடுகையில், மாநிலத்தில் உணவு நிலைமை திருப்திகரமென்றும், உணவைப் பற்றிய பிரச்சினையில் கவலையேதும் இல்லையென்றும், தேவையுள்ள இடங்களில் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தி அரிசி விநியோகம் செய்ய இந்தியப் பேரரசு ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், 1960-ம் ஆண்டுக்குள் நெய்வேலி பழுப்பு நிலக்கரி வேலைத் திட்டத்தின் முதற் கட்டம் முடிவு பெறுமென்று எதிர்பார்ப்பதாகவும், திட்டத்திற்கு உடனடியாகத் தேவையில்லாத கிராமங்களை, 'நில ஆர்ஜித' சட்டத்திலிருந்து விலக்கிவிட, அதற்கான திருத்த மசோதா இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படுமென்று அறிவித்தும், ரூ. 1½ கோடி செலவில் சேரிகள் அபிவிருத்தித் திட்டம் துவக்கப்படுமென்றும் கூறியிருக்கிறார்.

வி. வி. இராமசாமி

60-ம் ஆண்டு நிறைவு விழா

60 பவுன்கள் அன்பளிப்பு

விருதுநகர், எப். 30—

நெடுநாட்களாக பொதுசேவையில் குன்றாத ஆர்வத்துடன் நற்பணியாற்றிவரும் விருதுநகர் வி. வி. இராமசாமி அவர்களின் 60-ம் ஆண்டு நிறைவு விழா சிறப்புடன் கொண்டாடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சார்பில் அவருக்கு 60 பவுன்கள் அன்பளிப்பாகத் தரப்பட்டிருக்கிறது.

பல கட்சி பிரமுகர்கள், பொது நிறுவனங்கள், உற்றார் உறவினர்கள் விழாவில் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

தமிழகத்தின் அணுசக்தி மண் தொழிற்சாலை

மத்திய சர்க்கார் வசமாகும்

சென்னை, மே 1—

தற்போது சென்னை அரசாங்கம் நடத்திவரும் அணுசக்தி மண் தொழிற்சாலை மத்திய சர்க்கார் நிர்வாகத்திற்கு மாறுவது சம்பந்தமாக இந்திய அணுசக்திக் குழுவுடன் கலந்து பேச சென்னை அரசாங்க தொழில் இலாகா செயலாளர் பம்பாய் சென்றுள்ளார். இந்தத் தொழிற்சாலை கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக் குறிச்சியில் உள்ளது.

மாவட்ட ஆட்சி மன்றங்களுக்கு அதிகாரம் வழங்குகின்றனர்

சென்னை, மே. 1—

மாவட்ட ஆட்சி மன்றங்களுக்கு உட்பட்ட எல்லாப் பள்ளிகளிலும், ஏழை மாணவர்களுக்கு முழுச் சம்பள தள்ளுபடியோ, அல்லது ஒரு பகுதி தள்ளுபடியோ செய்ய சென்னை மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்ட ஆட்சி மன்றங்களுக்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலோ — இந்தியர் பிரதிநிதி நியமனம்

சென்னை, மே 1—

ஆங்கிலோ—இந்தியர் பிரதிநிதியாக தோழியர் ஏ. சுவாரஸ் அம்மையாரை சென்னை சட்டசபைக்கு கவர்னர் நியமனம் செய்துள்ளார்.

முதலீடு செய்ய உதவுவார்களாம்

சர்க்கரை உற்பத்தித் தொழிலை ஊக்குவிப்பார்களாம்!

டேராடூன், மே 2—

இரண்டாது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நாட்டின் சர்க்கரைத் தொழிலை ஊக்குவிக்க இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாம்.

1953—54-ம் ஆண்டில் இந்தியா 10 இலட்சம் டன் சர்க்கரைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்துள்ளதாம். ரூ. 60 கோடி பெறுமானமுள்ள சர்க்கரை இறக்குமதி செய்ய வேண்டியிருந்ததாம்.

இந்த ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 20 இலட்சம் டன் உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அந்நியநாணயச்செலாவணிக்கு சத்க்கரை பெரும் உதவியாக உள்ளதாம். ஏற்கனவே ஒரு இலட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்து ரூ. 8 கோடி அந்நியச் செலாவணி இந்தியாவுக்குக் கிடைத்ததாம்.

நாட்டில் 57 புது சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதென்றும் அவைகளில் 38 ஆலைகள் கூட்டுறவு முறையில் இயங்குகின்றனவென்றும் கூறப்பட்டிருக்கிறது.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒவ்வொன்றிலும் ரூ. 10 இலட்சம் முதலீடு செய்ய மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் உதவி புரியுமாம்.

இந்தியாவில் உணவு நெருக்கடி?

10 இலட்சம் டன் பற்றுக்குறை?

இலட்சுமணபுரி, மே 1—

நாட்டின் எந்தப் பகுதியிலும் உணவு பற்றுக்குறை ஏற்படாதவாறு தடுக்க இந்திய அரசாங்கம் முனைந்துள்ளது.

தற்போது சேமிப்பில் உள்ள உணவுப் பொருள் பற்றுக்குறையாக இருப்பதால் மேலும் 10 இலட்சம் டன் உணவுப் பொருள் வரும் செப்டம்பர் மாதத்திற்குள் சேமித்து வைக்க இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக மத்திய உணவு அமைச்சர் ஜெயின் தெரிவித்துள்ளார்.

வியட்நாம் அரிசியை இந்தியா வாங்குமாம்!

புதுடில்லி, மே 1—

வியட்நாமிலிருந்து 7,000 டன் அரிசி வாங்குவதற்கு இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இதற்குத் தரவேண்டிய பணத்தைக்கொண்டு இந்திய சணல் பொருள்கள், துணிகள், பொறியியல் கருவிகள், தோல் முதலியவைகளை வடவியட்நாம் வாங்க ஒப்புக்கொண்டிருக்கிறதாம்.

மேலும் 50,000 டன் உப்பு ஏற்றுமதியாகுமா?

புதுடில்லி, மே 2—

இந்தோனேஷியாவுக்கு முன்னமேயே 50,000 டன் உப்பு விநியோகம் செய்ய இந்தியப் பேரரசு உடன்பாடு செய்துகொண்ட செய்தி வெளியாயிற்று.

மேலும் 50,000 டன் உப்பு இறக்குமதி செய்துகொள்ள இந்தோனேஷியா விரும்புவதாகத் தெரியவருகிறது.

மே தின விழா

★

சென்னை :

5—5—57 காலை 10-மணிக்கு, பிராட்வே, எண் 4/88, 11-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் தோழர் தே. அன்பரசு தலைமையில் மே தினம் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

இலங்கை :

5—5—57-ல் இலங்கை—யாழ்ப்பாணம் தி. மு. கழகச் சார்பில் மே தின விழா கொண்டப்பெறும்; அதுபோது இலங்கையிலுள்ள பல தமிழ் அறிஞர்களும் தி. மு. கழகச் சொற்பொழிவாளர்களும் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

நாகை :

5—5—57 மாலை 6 மணிக்கு, நாகை - அவுரித் திடலில், மே தின விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர் சி. பி. சிற்றரசு பேசுவார்.

அன்று காலை 10 மணிக்கு, மேலக்கோட்டை வாயிலிலுள்ள அழகிரி மன்ற ஆண்டு விழாவில், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசுவார்.

கரூர் :

5—5—57 மாலை 6 மணிக்கு, கரூர் புகைவண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள தியாகராயர் திடலில், தோழர் ஏ. அம்மையப்பன் தலைமையில் நடைபெறும்; துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் தோழர்கள் டி. கே. சீனிவாசன், எம். குழந்தைவேல், என். இரத்தினம் ஆகியோர் பேசுவர்.

க. அன்பழகன்

அவர்களுக்குப் பாராட்டு விழா

4—5—57 மாலை 6 மணிக்கு சென்னை—பெரியமெட்டு, ஸ்டிங்கர்ஸ் தெருவில் (கவர்ன்மெண்ட் மெடிகல் ஸ்டோர் அருகில்) தோழர் ஆ. வீரன் தலைமையில் மேற்படி விழா நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். பேராசிரியர் க. அன்பழகன் நன்றியுரை ஆற்றுவார்.

கோவையில் பொதுச்செயலாளர்

நிகழ்ச்சிகள்

5—5—57 மாலை 4 மணிக்கு, கோவை - வடவெளி தி. மு. கழகத் துவக்க விழாவிலும்;

மாலை 6 மணிக்கு, கோவை - தெப்பக்குளம் வீதி மைதானம், மே தினக் கூட்டத்திலும்;

இரவு 9 மணிக்கு, கோவை - பெரியநாய்க்கன் பாளையம் பொதுக்கூட்டத்திலும்;

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்.

மதுரை—அறிவு வளர்ச்சி படிப்பக உறுப்பினர்கட்கு:

4-5-57 இரவு 9 மணியளவில், மதுரை—மீன்மார்க்கெட் மேற்படி படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது படிப்பக வளர்ச்சிபற்றி ஆராயப்படும்.

பல்கலை அரங்கம் துவக்க விழா

5—5—57 பல்கலை அரங்கத் துவக்கவிழா, சென்னை — திருவேட்டீசுவரன்பேட்டை என் 57, லக்கீர் சாயபு வீதி, 2-வது சந்தில் தோழர் என். கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

கேரளத்தில் விமானப் பயிற்சிப் பள்ளி துவக்கப்படும்?

எர்ணாகுளம், மே 1—

கேரள மாநிலத்தில் ஒரு விமானப் பயிற்சிப் பள்ளியைத் துவக்க இந்திய அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தெரியவருகிறது.

சேலம் தேர்தல் வழக்கு நிதி:

கோவையில் சிறப்புக் கூட்டம்

5—5—57 காலை 9-மணிக்கு கோவை—தியேட்டர் ராயலில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் **'இலக்கிய இன்பம்'** எனும் பொருள்பற்றி சிறப்புரை ஆற்றுவார்.

நன்கொடை :

ரூபாய் 1; அணு 8.
பெண்கள் : அணு 4.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் நிறுவன 3-வது ஆண்டு விழா

5—5—57 காலை 9 மணிக்கு, சேலம் நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளியில் சேலம் மாவட்ட மேற்படி நிறுவனத்தின் 3-வது ஆண்டு விழா, திரு. டி. கோவிந்தராசன் தலைமையில் நடைபெறும்; பிரமுகர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

இராயபுரம்—பகுத்தறிவு வாலிபர் மன்றம் துவக்க விழா

5—5—57 மாலை 5 மணிக்கு சென்னை—இராயபுரம் மன்னார் சாமி கோவில் தெருவில் தர்மராசா கோவில் திடலில், மேற்படி மன்றத் திறப்பு விழா தோழர் ந. இளமாறன் தலைமையில் நடைபெறும்; தோழர் காஞ்சி-கலியாணசுந்தரம் மன்றத்தைத் திறந்து வைப்பார்; தோழர்கள் மு. த. இளஞ்சேரன், தி. ந. மதிவாணன், ம. நீலகண்டன் ஆகியோர் பேசுவர்.

தி. மு. கழக எம்.எல்.ஏ.-க்களுக்கு

பாராட்டுக் கூட்டம்

5-5-57 மாலை 6 மணிக்கு, சென்னை--பார்க்டவுன் 38-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், பார்க்டவுன்(பூங்கா நகர்) இராசப்பசெட்டித் தெருவில் வெற்றிபெற்ற எம். எல். ஏ.-க்களை பாராட்டப் பொதுக்கூட்டம் தோழர் கே. லோகநாதன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் கே. கோவிந்தசாமி, கோ. செங்குட்டுவன், கே. கருணாகரன் (தெலுங்கில்) வாழ்த்துரை வழங்குவர்.

தோழர்கள் க. அன்பழகன், ப. உ. சண்முகம், எம். பி. சுப்பிரமணியம், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் கலந்துகொள்வர்.

பாராட்டு-வழியனுப்பு

5—5—57 பிற்பகல் 4-மணிக்கு சென்னை பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில், தமிழாசிரியர் கழகம், மாணவர் மன்றம், தாய்மார் கழகம், ஓய். எம். சி. ஏ. பட்டி மன்றம் ஆகியவற்றின் சார்பில், இரஷ்யாவில் தமிழ்ப்பணி புரியச் செல்லும் பேராசிரியர் அ. கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பாராட்டி — வழியனுப்பும் விழா, பேராசிரியர் மயிலை-சிவமுத்து அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது பேராசிரியர் மா. இராசமாணிக்கனார், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், டாக்டர் ஆர். பி. சேது பிள்ளை, டி. புருஷோத்தம முதலியார் மற்றும் பலர் பேசுவர்.

திண்டுக்கல்லில் மே விழா —பாராட்டுக் கூட்டம்

5—5—57 மாலை 6-30 மணிக்கு திண்டுக்கல் காந்தி மைதானத்தில், சௌந்திரபாண்டியனார் நினைவு மன்றச் சார்பில், மேதின விழாவும், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களுக்குப் பாராட்டுக்கூட்டமும் தோழர் ஆர். சனார்த்தனம் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர் பி. சமதர்மம், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

கழகக் கூட்டங்கள்

★

கவுந்தப்பாடி :

பிரகதீஸ்வரர் கோயில் திடலில்
5—5—57 மாலை 5-30 மணிக்கு
தலைவர் : இரா. சந்திரசேகரன்
பேசுவோர் :
இரே. இளம்வழுதி
மா. மாணிக்கம்
வை. விழிநாதன்
வே. கணேசன்
(இரவு 10 மணிக்கு 'மரண ஓலம்' நாடகம் நடைபெறும்; கட்டணம் இல்லை.)

★

சேலம் - கிச்சிப்பாளையம்:

அருந்ததி மாரியம்மன் கோயில் அருகில்
5—5—57 மாலை 6-30 மணிக்கு
தலைவர் : ஏ. மாரியப்பன்
பேசுவோர் :
க. அறிவழகன்
இ. ஆர். கிருஷ்ணன்
வி. சிவப்பிரகாசம்
சிற்றுளி-சுப்பிரமணியம்

★

நல்லூர்பேட்டை :

(குடியேற்றம்)
ரேடியோ மைதானத்தில்
5—5—57 மாலை 6-30 மணிக்கு
தலைவர் : கு. சி. பொன்னுசாமி
பேசுவோர் :
கண்ணதாசன்
எஸ். எஸ். தென்னரசு
டி. சாம்பசிவம்

★

மொஞ்சனூர் :

மாரியம்மன் கோவில் திடல்
தி. மு. கழகத் துவக்கவிழா
4—5—57 மாலை 6-மணிக்கு
தலைவர் : எஸ். வேலுசாமி
பேசுவோர் :
டி. கே. சீனிவாசன்
என். இரத்தினம்
எம். குழந்தைவேல்
ஏ. அம்மையப்பன்
எம். கே. கரிகாலன்

★

கூடலூர் :

தி. மு. கழகத் துவக்கவிழா
6—5—57 மாலை 7-மணிக்கு
தலைவர் :
கன்னிவாடி K. S. S. பெரியார்
பேசுவோர் :
என். வி. நடராசன்
எம். கே. கரிகாலன்
என். இரத்தினம்
எம். குழந்தைவேல்
ஏ. அம்மையப்பன்

முருகூர் உழவுத் தொழிலாளர் முன்னேற்றக் கழக அமைப்பு விழா —மே தின விழா

6—5—57 மாலை 6-30 மணிக்கு மேற்படி விழாவும் பொதுக்கூட்டமும் தோழர் அரு. ஆதிமூலம் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் எம். எஸ். மணி, அ. கரியபெருமாள், இரா. இளமுருகு, தி. இராமசாமி ஆகியோர் பேசுவர்.

உறையூர் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகத் துவக்க விழா

5—5—57 காலை 10 மணிக்கு திருச்சி—உறையூர் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகத் துவக்க விழாவையொட்டி, தோழர் எம். எஸ். மணி அவர்கள், படிப்பகத்தில் கொடியேற்றுவார். மாலை 6 மணிக்கு உறையூர்—பாண்டமங்கலம்ரோடு, அரசமரத்தடியில் தோழர் சி. மாரியப்பன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் கி. மனோகரன், எம். எஸ். மணி, தி. மா. பரமசிவம் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.